**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 135/2020</u>**

நாள் 12.08.2025

DW1 – சுப்பராயன்

த/பெ – லேட்.ஆறுமுத்தாக் கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of August 2025.)**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. வாதி பாப்பாத்தி பழனிச்சாமி கவுண்டரின் மகள் என்ற விபரம் 2005-ம் ஆண்டுக்கு முன்பாகவே தெரியும் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி சுப்பிரமணியன் தாயார் பெயர் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் வாதி குடும்பத்திற்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பழனிச்சாமி கவுண்டருக்கு வாதியும், 1-ம் பிரதிவாதி சுப்பிரமணி மற்றும் காலஞ்சென்ற ரங்கசாமி ஆகிய மூவரும் மக்கள் என்றால் சரிதான். பழனிச்சாமி கவுண்டர் இறந்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை. பழனிச்சாமி கவுண்டர் இறந்த தேதி குறித்த விபரம் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு அருகில் ஆலயா அகாடமி என்ற சிபிஎஸ்இ பள்ளி நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எனது பள்ளி சொத்திற்கு இணை பூமி தாவா சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களைப் பொறுத்து ஏற்பட்ட 03.11.2005-ம் தேதியிட்ட பதிவு பாகப்பிரிவினை பத்திரத்தில் வாதி பாப்பாத்தியை ஏன் சேர்க்கவில்லை என்று கேட்டு தெரிந்து கொண்டேனா? என்றால் வாதி பாப்பாத்தி பங்கு வேண்டாம் என்று சொல்லி விட்டதாக சொன்னார்கள். நான் சொல்வது தவறு என்றும்,

வாதியை வேண்டுமென்றே விட்டு விட்டு அந்த பாகசாசனத்தை பொய்யாக ஏற்படுத்தி கொண்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதிக்கு சட்டப்படி பொதுவில் 1/3 பங்கு பாக பாத்திய உரிமை உள்ள நிலையில் அதை மறைத்து ஏற்படுத்தப்பட்ட பாகசாசனம் சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

2. 01.03.2004-ம் தேதியில் ஏற்பட்டதாக சொல்லப்படும் உயில் சாசனம் ஏற்பட்ட போது நான் உடன் செல்லவில்லை. அதனால், அந்த உயில் சாசனம் ஏற்பட்ட விதம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் பழனிச்சாமி கவுண்டர் 21.08.2007-ம் தேதியில் இறந்து போனதை24.08.2007-ம் தேதியில் பதிவு செய்யப்பட்டு அந்த இறப்பு சான்றிதழின் நகலை வாதி 03.11.2009-ம் தேதியில் பெற்று வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பொய், பழனிச்சாமி கவுண்டர் 21.08.2007-ம் தேதிக்கு முன்பாகவே இறந்து போய்விட்டார். வா.சா.ஆ.1 இறப்புச் சான்றிதழை வாதி தரப்பில் வழக்கு தாக்கல் செய்த போதே தாக்கல் செய்துள்ள நிலையில் அதை நாங்கள் மறுப்பது சட்ட ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பார்த்த போது பழனிச்சாமி கவுண்டர் என்ற பெயரில் இறப்பு சான்று பதிவாகவில்லை என்பதை தெரிந்து கொண்டேன். பழனிச்சாமி கவுண்டரின் மனைவி பெயர் பொன்னம்மாள் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பொன்னம்மாள் 1994-ம் ஆண்டு வாக்கிலேயே இறந்து போய்விட்டார் என்றால் இருக்கலாம். வா.சா.ஆ.1 இறப்புச் சான்றிதழை 2009-ம் ஆண்டில் நகல் போட்டு எடுத்து அதற்கு பின்னிட்டு இந்த வழக்கை 2020-ம் ஆண்டில் தாக்கல் செய்துள்ள நிலையில் அந்த இறப்புச் சான்றிதழை போலியாக உருவாக்கி பெற்றதாக நான் சொல்லியுள்ளது

பொய் என்றால் சரியல்ல. 03.11.2005–ம் தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினை மற்றும் கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3 ஆவணங்களில் பழனிச்சாமி கவுண்டரின் இறப்பு தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சொத்தின் முழு விஸ்தீரணத்தையும் கிரையம் கொடுக்கும் பட்சத்தில் தான் அந்த சொத்தின் மூல ஆவணத்தை கிரையம் வாங்கும் நபரிடம் ஒப்படைப்பார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தின் அசல் என் கை வசம் எப்படி வந்தது என்றால் பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணம் மூலம் நான் சொத்தை கிரையம் பெறும் பொழுது அந்த பி.வா.சா.ஆ.1 அசல் ஆவணத்தை என்னிடம் கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். பழனிச்சாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பழனிச்சாமி கவுண்டருக்கு பொதுவில் 1/4 பங்கும், வாதிக்கு பொதுவில் 1/4 பங்கும், 1–ம் பிரதிவாதிக்கு பொதுவில் 1/4 பங்கும் மற்றும் 4,5 பிரதிவாதிகளின் தகப்பனாரான காலம் சென்ற ரங்கசாமி என்பவருக்கும் பொதுவில் 1/4 பங்கும் பாத்தியம் என்றால் சரியல்ல. அதனால், பிரிக்கப்படாத பூர்வீக சொத்தில் பழனிச்சாமி கவுண்டர் உயில் சாசனம் எழுதி வைக்க அவருக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. இந்த நிலையில் அவர் உயில் சாசனம் எழுதி வைத்ததாக நாங்கள் இந்த வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. அந்த உயில் சாசனத்தை முறையாக உரிய நீதிமன்றம் மூலமாக உறுதிப்படுத்தப்படவில்லை என்று சொன்னால் அது எனக்கு தெரியாது.

3. உயில்சாசனம் ஏற்படுத்தப்பட்ட போது யார் யார் உடனிருந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த உயில் சாசனம் எந்த தேதியில் அமுலுக்கு வந்தது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. அந்த பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தில் பழனிச்சாமி

கவுண்டருக்கு படித்து காண்பிக்கப்பட்டு அதை அவர் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு கைரேகை வைத்தார் என்ற வாசகம் எதுவும் அதில் சொல்லப்படவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. பழனிச்சாமி கவுண்டருக்கு எழுத படிக்க தெரியுமா என்று எனக்கு தெரியாது. வாதியை தரப்பினராக சேர்க்காமல் ஏற்படுத்தப்பட்ட பி.வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது, அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அந்த பி.வா.சா.ஆ.2 ஏற்பட்ட தேதியானது 03.11.2005–ம் தேதியிலேயே பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தை எனது பெயரில் ஏற்பட்டுள்ள நிலையில் அந்த கிரைய ஆவணமும் செல்லாது, அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு ஆவணங்களிலும் பழனிச்சாமி கவுண்டரின் இறந்த தேதியை குறிப்பிட்டு சொல்லாத நிலையில் அந்த ஆவணங்கள் சட்டப்படி நிலைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாக வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதிக்குள்ள பாகத்தை ஏமாற்ற வேண்டி பி.வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தையும், பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தையும் 03.11.2005–ம் தேதியிலேயே பொய்யாக ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையிலான மூன்று ஆவணங்களும் பழனிச்சாமி கவுண்டருக்கு தெரியாமலேயே மோசடியாக ஏற்படுத்தியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பழனிச்சாமி கவுண்டர் 21.08.2007–ம் தேதியில் தான் இறந்து போனார் என்று சொன்னால் சரியல்ல. பழனிச்சாமி கவுண்டரின் இறப்பு தேதியை நாங்கள் தெரிந்து கொண்டு தான் பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3 ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டோம் என்றும், அந்த இறப்பு தேதியை ஒப்புக்கொண்டால்

என்னுடைய ஆவணங்கள் செல்லாததாகி என்பதால் தான் பழனிச்சாமி கவுண்டர் 21.08.2007–ம் தேதிக்கு முன்பாகவே இறந்து போய்விட்டதாக சொல்லி பொய்யாக எதிர்வழக்காடி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் சொத்து பூர்வீக வகையில் பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு தாவா சொத்து பூர்வீக சொத்து என்ற வகையில் கிரையம் பெற்றுள்ளதால் தான் 2,3 பிரதிவாதிகளும் இந்த வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 இறப்பு சான்றிதழை நான் எனது எதிர்வழக்குரையிலும், எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலும் மறுத்து எதுவும் சொல்லப்படாத நிலையில் தற்போது மறுப்பது சட்ட ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் சொத்தைமோசடியாக தான் கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால், பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் நடைமுறைக்கே வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் நான் சொல்வது போல வாதியின் வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி முறையான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்கிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.** C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.08.12 17:03:53 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**